பக்கங்கள்:-22

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆணி 11 | செவ்வாய்க்கிழமை | 27.08.2024 | அதிர்வு 025

## யாழில் நாய் கடித்து பெண் ஒருவர் சாவு!

யாழ்ப்பாணத்தில் வளர்ப்பு நாய் கடித்ததால் சிகிச்சை பலனின்றி பெண் ஒருவர் உயிரிழந்தார்.

யாழ். வண்ணார்பண்ணையைச் மகேந்திரன் சாந்தி என்ற 62 வயதான பெண்ணே இவ்வாறு 05

# அதிகாரப் பகிர்வு பற்றிய அறிவிப்பில் அநுரவும் சஜித்தும் ஏட்டிக்குப் போட்டி

+ புதிய அரசமைப்புப் பணி விட்ட இடத்திலிருந்து தொடரும் என்கிறார் ஒருவர்
+ உச்ச அதிகாரப் பகிர்வும் மீளப் பறிக்கப்படாமையும் உறுதி என்கின்றார் மற்றவர்





நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மையினரின் வாக்குகளை வளைத்துப் போடுவதில் தீவிரமாக இருக்கும் பிரதான வேட்பாளர்கள், அதற்காக ஏட்டிக்குப் போட்டியாக அறிவிப்புகளை விடுத்து வருகின்றார்கள். குறிப்பாக பிரதான எதிர்க்கட்சி வேட்பாளர்களான சஜித் பிரேமதாஸவும், அநுரகுமார திஸாநாயக்கவும் அதிகாரப் பகிர்வு தொடர்பில் முக்கியமான விடயங்களை ஏட்டிக்குப் போட்டியாக அறிவித்திருக்கின்றார்கள். 05

### சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப் பகிர்வுக்கு

## மக்கள் ஆணையைக் கோருவதை கைவிட்டது பொதுக் கட்டமைப்பு!



வடக்கு – கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்துக்குச் சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப் பகிர்வுக்குத் தமிழ் மக்களின் ஒன்றுபட்ட ஆணையைத் தமிழ்ப் பொது வேட்பாளர் மூலம் இந்த ஜனாதிபதித் தேர்தலில் கோரும் திட்டத்தைத் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு கைவிட்டுள்ளது 05



பல்வேறு அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து, அவற்றுடன் பயணிப்பது 'பேயுடன் குடும்பம் நடத்துவதற்கு' ஒப்பானது என்பது தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பில் தங்களுக்கும் சம பங்கு என்ற உரிமையுடன் போய் அமர்ந்து கொண்ட பத்தி எழுத்தாளர்களுக்கும் விமர்சகர்களுக்கும் பொதுக் கட்டமைப்பின் நேற்றைய கூட்டத்துடன் ஓரளவுக்குத் தெளிவாகப் புரிந்து இருக்கும் என்று நம்பலாம்.

வடக்கு – கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்துக்கு சமஷ்டி தீர்வே ஒரே வழி என்று தமிழ் மக்களிடம் இந்தத் தேர்தல் மூலம் ஆணை கேட்போம் என்று புறப்பட்டவர்கள், அந்த ஆணைக் கோரிக்கையை கைவிட்டு, 'தமிழர் தேசமாக 06





# திருகோணமலை ஆயரை நேற்று நேரில் சந்தித்து ஆசி பெற்ற சஜித்

எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாஸ நேற்று திருகோணமலை, சேருவில நகரில் நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டதன் பின்னர், திருகோணமலை மறைமாவட்ட ஆயர் நோயல் இம்மானுவேல் ஆண்டகையை நேரில் சந்தித்து எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான ஆசிகளைப் பெற்றுக்கொண்டார்.

# கடத்திச் சென்றனர் என பெண் வைத்தியர் அம்புலன்ஸிலிருந்து குதித்ததால் பரபரப்பு

## மக்களால் நையப்புடைக்கப்பட்ட சாரதி பொலிஸாரால் கைது



(வவுனியா நிருபர்)

கடத்திச் சென்றனர் என பெண் வைத்தியர் ஒருவர் நோயாளர் காவு வண்டியில் இருந்து குதித்த நிலையில் அங்கு கூடியவர்கள் சாரதி மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். இதையடுத்து சாரதி நெளுக்குளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா – மன்னார் வீதியில் நேற்று மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா வைத்தியாசாலையில் இருந்து பம்பைமடு பகுதியில் உள்ள ஆயுள்வேத வைத்தியசாலைக்கு நோயாளர் காவு வண்டியில் சாப்பாடு கொண்டு செல்லப்பட்டது. அந்தச் சாப்பாட்டை வழங்கிவிட்டு நோயாளர் காவு வண்டி வவுனியா நோக்கி வந்தபோது வீதியில் நின்ற ஆயுள்வேத பெண் வைத்தியர் ஒருவர் அந்த நோயாளர் காவு வண்டியை மறித்து அதில் ஏறியுள்ளார்.

மேற்படி பெண் வைத்தியரை ஏற்றிக்கொண்டு வவுனியா நோக்கிச் சென்ற நோயாளர் காவு வண்டி வேப்பங்குளம் பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளை நிரப்பி விட்டு, மீண்டும் மன்னார் வீதி ஊடாக பம்பைமடு நோக்கிப் புறப்பட்ட நிலையில் நோயாளர் காவு வண்டியில் இருந்த பெண் வைத்தியர் நோயாளர் காவு வண்டி கதவைத் திறந்து கீழே குதித்துள்ளார்.

இதனால் அந்தப் பெண் வைத்தியர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அங்கு கூடிய மக்களிடம் தன்னைக் கடத்திச் செல்ல முற்பட்டனர் என பெண் வைத்தியர் தெரிவித்ததையடுத்து நோயாளர் காவு வண்டியை மறித்து அதன் சாரதி மீது தாக்குதல் மேற்கொண்ட மக்கள், சாரதியை நெளுக்குளம் பொலிஸில் ஒப்படைத்துள்ளனர்.

இதனையடுத்து கைது செய்யப்பட்டவரையும் நோயாளர் காவு வண்டியையும் நெளுக்குளம் பொலிஸுக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் வைத்தியசாலை உதவிப் பணிப்பாளர் உள்ளிட்ட குழுவினர் நெளுக்குளம் பொலிஸுக்குச் சென்று நோயாளர் காவு வண்டியை விடுவித்துள்ளதுடன் முறைப்பாட்டை மீளப்பெறச் செய்வதற்கான முயற்சிகளும் இடம்பெற்றன.

இது தொடர்பில் நெளுக்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, நோயாளர் காவு வண்டி சாரதி தனது வீட்டுக்குச் செல்ல வாகனத்தைத் திருப்பியபோதே சகோதர மொழி பெண் வைத்தியர் அச்சம் காரணமாக அதிலிருந்து குதித்தார் என்று வைத்தியசாலை தரப்பால் தெரிவிக்கப்பட்டுள்ளது.





வைத்தியர் முரளி வல்லிபுரநாதன்
(சமுதாய மருத்துவ நிபுணர்)

# இலங்கையில் மருத்துவ அலட்சியத்தால் நேரிடும் மரணங்களும் ஊடகங்களின் சமூகப் பொறுப்பும்

மருத்துவ அலட்சியத்தால் மன்னாரில் இறந்த இளம் தாயின் கணவர் நீதி தாமதிக்கப்பட்ட நிலையில் தவறான முடிவினை எடுத்த தகவலானது மனதைப் பெரும் வேதனைக்கு உள்ளாகியுள்ளது.

தவறான முடிவுகள் ஒருபோதும் பிரச்சினைகளுக்கு தீர்வாகாது என்பதுடன் ஊடகங்கள், மருத்துவர் ஒருவர் மற்றும் ஊடகவியலாளர்கள் ஆகிய தரப்பினர் மேலும் பொறுப்புடன் செயல்பட்டு இருந்தால் இந்த அநாவசிய இறப்புத் தவிர்க்கப்பட்டு இருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது.

2014 இல் முதன் முதலில் தமிழ் மொழியில் வெளியிடப்பட்டு 2017 இல் மேம்படுத்தப்பட்ட தற்கொலை தொடர்பான தகவல்களை வெளிப்படுத்துவதில் ஊடகவியலாளர்கள் மற்றும் சமூக வலைதளங்களைப் பயன்படுத்துவோரின் பாரிய பொறுப்பை மீண்டும் நினைவுபடுத்துகின்றேன்.

குறிப்பாக தற்கொலையை நியாயப்படுத்துவது, தற்கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட முறைகளை வெளிப்படுத்துவது மற்றும் தற்கொலை செய்தவரின் பெயர் விபரங்களை வெளியிடுவது ஆகியவற்றால் சமூகத்தில் தாமும் பாதிக்கப்பட்டுள்ளதாக உணரும் ஏனையவர்களையும் தற்கொலை செய்யத் தூண்டும் என்பதை அனைவரும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மன்னாரில் இளம் தாயின் சாவைத் தொடர்ந்து ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகர்கள், வலையொளி ஊடகர்கள் எனப் பலரும் ஊடக ஒழுக்க நெறியைப் பல சந்தர்ப்பங்களில் வெளிப்படையாக மீறியுள்ளனர். முக்கியமாக இறந்தவரின் தனிப்பட்ட வாழ்க்கையை ஆராய்ந்து "யார் குற்றவாளி" என்று கருத்து வெளியிடும் நீதிபதிகளாக ஊடகவியலாளர்கள் குறிப்பாக வலையொளி பதிவாளர்கள் செயற்படுவது ஏற்கனவே குடும்ப உறுப்பினரின் உயிரிழப்பால் பாதிக்கப்பட்டுள்ள உறவினர்களின் மனவேதனையை அதிகரித்து வெந்த புண்ணில் வேல் பாய்ச்சி அவர்களை மோசமான முடிவுகளை எடுக்கத் தூண்டுகின்றது.

இதனாலேயே பல சந்தர்ப்பங்களில் பொறுப்புடன் செயற்படும் ஒரு சிலரைத் தவிர ஏனைய வலையொளி பதிவாளர்களையும் சமூக ஊடகர்களையும் பொறுப்பற்ற – தமது இலாபத்தையே குறிக்கோளாகக் கொண்டு செயற்படும் – பிணந்தின்னிக் கழுகுகளாகக் கருத வேண்டியுள்ளது.




அத்தோடு இவ்விடயத்தில் நேரடியாகத் தன்னார்வ அடிப்படையில் தலையிட்ட ஒரு வைத்தியர் வைத்தியத்துறையின் மீதான தனது நம்பிக்கையீனங்களை சமூகமயப்படுத்தியதால் அதாவது வைத்தியர்களைத் தான் குறைகூறியதால் அவர்கள் தமக்குப் பாதகம் செய்துவிடுவார்கள் என்ற கருத்தைக் கூறி, தனக்குத் தானே வைத்தியம் செய்து கொள்வதாகவும் தொடர்ச்சியாகக் கூறி வருவதால் சமூகத்தில் வைத்தியத்துறையின் தவறுகளைச் சுட்டிக்காட்டியவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களும் அச்சத்தால் வைத்திய சிகிச்சை பெறுவதைத் தவிர்க்கும் நிலைப்பாட்டை எடுக்கும் நிலைக்குத் தள்ளப்படலாம். இதன் காரணமாக வைத்தியருக்கே ஆபத்து வருமானால் நாம் எல்லாம் எம்மாத்திரம்" என்று அஞ்சி உரிய சிகிச்சைகளைப் பெறாது மக்கள் மரணிக்கும் ஆபத்து அதிகரித்திருக்கின்றது.

மன்னார் இளம் தாயின் கணவர் கடுமையான மன அழுத்தத்துக்கு ஆளாகியிருந்தாலும், மேற்குறிப்பிட்ட பயம் காரணமாக மருத்துவ உளவளத்துணை எதனையும் நாடாது மரணித்திருக்கக் கூடும். ஆகவே, தாமே குறித்த பாதிப்புக்குள்ளான குடும்பத்தினரைப் பாதுகாப்பதாக பகிரங்கமாகக் கூறித்திரியும் அதே வைத்தியர் உண்மையாகவே அந்தக் குடும்பத்தின் நலன்களில் அக்கறை காட்டியிருந்தால் தகுந்த உளவள ஆற்றுகைகள் ஊடாக இந்த மரணத்தைத் தவிர்த்திருக்கலாம்.

மறுபுறம் இளம் தாயின் இறப்பு தொடர்பான விசாரணையில் பணி இடைநீக்கம் செய்யப்பட்ட சுகாதார ஊழியர்களின் பெயர்களை ஊடகங்கள் எந்தவித சுய கட்டுப்பாடும் இன்றி வெளிப்படுத்தி ஊழியர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் களங்கத்தை ஏற்படுத்தியுள்ளனர். பணி இடைநீக்கம் என்பது ஆரம்ப கட்ட விசாரணைகளின்போது சந்தேகத்துக்குரிய ஊழியர்கள் மீது எடுக்கப்படும் தற்காலிக நடவடிக்கை ஆகும். இரண்டு மாதங்களுக்குள் ஆரம்ப கட்ட விசாரணை பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதுடன் அதன் பின் முறையான விசாரணை ஆரம்பிக்கப்பட்டு சம்பவம் நடந்து 6 மாதங்களுக்குள் விசாரணை பூர்த்தி செய்யப்பட்டு குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஆரம்ப கட்ட விசாரணைகளில் பணி இடைநீக்கம் செய்யப்பட்ட பலர் பின்னர் முறையான விசாரணையில் குற்றம் அற்றவர்கள் என்று நிரூபிக்கப்பட்டு பணி இடைநீக்கம் செய்யப்பட்ட காலத்துக்கான சம்பளத்துடன் மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டுள்ளதை நான் அவதானித்து இருக்கின்றேன்.

தொடர்ச்சி▼




# இலங்கையில் மருத்துவ அலட்சியத்தால் நேரிடும் மரணங்களும் ஊடகங்களின் சமூகப் பொறுப்பும்

தொடர்ச்சி▲

எனவே, ஆரம்ப கட்ட விசாரணைகளில் பணி இடைநீக்கம் செய்யப்பட்டவரின் பெயர் விபரங்களை அவர் இன்னமும் குற்றவாளி என்று நிரூபிக்கப்படாத நிலையில் ஊடகங்கள் வெளிப்படுத்தி சமூகத்தில் குற்றவாளியாக வெளியே நடமாட முடியாதவாறு செய்வது ஊடகங்களின் ஒழுக்க நெறியை மீறிய அராஜக செயலாகவே கருத வேண்டியுள்ளது.

இவரது மரணத்துக்குப் பொறுப்புச் சொல்ல வேண்டிய கடமை இன்னொரு தரப்பினருக்கும் சம அளவில் உண்டு. கர்ப்பகாலத் தாயார் ஒருவரது இழப்பு எவராலும் ஈடுகட்ட முடியாத இழப்பு. அதனால் அவரது குடும்பத்தவர்கள், நெருங்கியவர்கள் என அனைவரும் சுகாதாரத்துறையினரது உளவள மருத்துவப் பிரிவினர் மற்றும் தாய்சேய் நலப்பிரிவினர் ஆகியோரால் நெருக்கமான அரவணைப்பு மற்றும் ஆற்றுப்படுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட வேண்டும். அவ்வாறு உள ஆற்றுப்படுத்துகைக்குச் சென்ற உளவளத் துணையாளர்கள் சம்பந்தப்பட்ட குடும்பத்தினரால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்றும், சுகாதாரதுறையினர் தொடர்பில் வழங்கப்படும் எதிர்மறையான தகவல்களால் சுகாதாரப் பணியாளர்களை எட்ட வைத்திருக்கவே அக்குடும்பத்தினர் விரும்பினர் என்றும் தெரியவருகின்றது.

குறித்த செயற்பாட்டால் சுகாதாரப் பணியாளர்கள் மனச் சோர்வடைந்தும், பொறுப்பற்ற ஊடக வசைச் சொற்களால் அச்சமடைந்தும் போனதால் அக்குடும்பத்தைத் தமது அரவணைப்பில் வைத்திருக்காது விலகியிருக்கலாம்.

அதேபோல் ஒரு இணையத் தளத்தில் மன்னார் இறப்பு தொடர்பாக கருத்து வெளியிட்ட வைத்தியர் செந்தூரனின் குடும்பப் புகைப்படங்களுடன் பாலியல் ரீதியாகக் கொச்சைப்படுத்தும் கட்டுரைகளை வெளியிடுவது ஊடக தர்மத்துக்கு ஒவ்வாத ஒட்டுண்ணிகளால் இயக்கப்படும் ஊடக மாபியாவின் செயற்பாடாகவே கருதவேண்டியுள்ளது. இது போலவே வைத்தியத்துறை மாபியா குழு உறுப்பினர்களினால் இயக்கப்படும் அநாமதேய முகநூல் பதிவுகள், கருத்துக்களைப் பதில் கருத்துக்களால் எதிர்கொள்ள முடியாத கோழைகள் தனிநபர்களையும் அவர்களது குடும்பங்களையும் தனிப்பட்ட ரீதியாகத் தாக்கும் கேவலமான செயலாக எடுத்துக்கொள்ளலாம்.

இவை ஒருபுறம் இருக்க, மன்னார் இளம் தாயின் அநியாயச் சாவுக்காக இதுவரை ஒருவர் கூட கைது செய்யப்படாதது அனைவரின் மனதிலும் பெரும் கிலேசத்தினை எழுப்பியுள்ளது. ஏனைய இடங்களில் இது போன்ற சம்பவங்கள் இடம்பெற்ற வேளையில் மருத்துவ அலட்சியத்துக்குப் பொறுப்புக்கூற வேண்டிய மருத்துவர்கள் உட்பட சுகாதார ஊழியர்கள் பலரும் கைது செய்யப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டு இருந்தனர். உண்மையில் மன்னாரைச் சேர்ந்த சட்டவாளர்களும் ஏனைய மன்னார் சமூக செயற்பாட்டாளர்களும் பொது அமைப்புகளும் ஏழைகளின் கண்ணீருக்கு நீதி கிடைக்காத இந்தக் கேவலமான நிலையை எண்ணி வெட்கித் தலைகுனிய வேண்டும். காலம் கடந்த நீதி மறுக்கப்பட்ட நீதிக்கு சமமாகும். எனவே விரைவான நீதியைப் பெற முற்படுவதே இழந்த உயிர்களுக்கும் பிஞ்சுக் குழந்தைக்கும் செய்யும் கைமாறாக இருக்கும்.

வட பகுதியில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் நேர்மையான மருத்துவர்கள், கட்சி அரசியல் செய்யாத சட்டத்தரணிகள், சமூக நீதிக்காக குரல் கொடுப்போர் மற்றும் ஊறுபடும் நிலையில் உள்ள பெண்களுக்காக குரல் கொடுக்கும் அமைப்புகள் ஒன்றிணைந்து ஒரு தன்னார்வ சுயாதீனக் கட்டமைப்பினை மாவட்டங்கள் தோறும் ஏற்படுத்தி வைத்தியசாலைகளில் இடம்பெறும் ஒவ்வொரு உயிரிழப்பிலும் மருத்துவ அலட்சியம் இருந்ததா என்பதை ஆராய்ந்து பாதிக்கப்பட்ட நோயாளிகள் மற்றும் உறவினர்களுக்கு உதவ முன்வரவேண்டும்.. மருத்துவ அற நெறியைக் கற்பிக்கும் ஆசிரியர் என்ற வகையில் நான் எப்போதும் எனது பக்கச்சார்பற்ற ஆலோசனைகளை வழங்கத் தயாராக இருக்கின்றேன். ஆனால், அதற்கான எழுச்சி பாதிக்கப்படும் பிராந்தியங்களில் இருந்து உருவாக வேண்டும். அதன் மூலமாகவே வவுனியா உட்பட வட பகுதியில் தொடர்ச்சியாகக் கவனக்குறைவு காரணமாக இடம்பெறும் தாய் மற்றும் சிசு மரணங்கள் தவிர்க்கப்படலாம்.




## அதிகாரப் பகிர்வு பற்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

2015 - 2019 இடைப்பட்ட காலத்தில் புதிய அரசமைப்பை தாயாரிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட முயற்சிகளை தொடர்ந்து துரிதமாக முன்னெடுத்து நிறைவு செய்வோம் என்று நேற்றுத் தாம் வெளியிட்ட தமது தேர்தல் விஞ்ஞாபனத்தின் இறுதி அத்தியாயத்தில் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்திருக்கின்றார்.

இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்களிப்போடு அந்த புது அரசமைப்பு உருவாக்க முயற்சி முன்னெடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேசமயம் ஒரு நாட்டுக்குள் உச்ச அதிகாரப் பகிர்வு வழங்கப்படும் என்றும், அதே சமயம் மாகாணங்களுக்குப் பகிரப்படும் அதிகாரம் மத்திய அரசினால் மீளப் பறிக்கப்படாமையை உறுதி செய்யும் ஏற்பாடுகள் இருக்கும் என்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸ நேற்றுத் திருகோணமலை மாவட்டத்தில் தமது பிரச்சாரக் கூட்டங்களில் அறிவித்திருக்கின்றார். அது மாத்திரமில்லாமல், வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்காக சர்வதேச உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் விசேடமாக கூட்டப்படும் என்றும் அவர் அறிவித்திருக்கின்றார்.

பகிரப்படும் அதிகாரம் மத்திய அரசினால் மீளப் பறிக்கப்படாமையை உறுதி செய்யும் ஏற்பாடுகள் இருந்தால் அதுவே சமஷ்டிக் கட்டமைப்பு என்று அர்த்தப்படுத்தப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

சஜித் பிரேமதாஸவின் தேர்தல் விஞ்ஞாபனம் நாளைமறுதினம் 29 ஆம் திகதி வெளியிடப்படுகையில் அதில் இவ்விடயங்கள் இடம்பெற்றிருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேசமயம் நேற்று வெளியான தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்கவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இடம்பெற்றிருக்கும் சில முக்கிய அம்சங்கள் வருமாறு:-

\+ இனம், மொழி, மதம், சாதி அல்லது பால்நிலை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு எந்தவொரு பிரஜையும், மக்கள் சமூகமும் அவமதிப்புக்கோ, துன்புறுத்தலுக்கோ, அழுத்தத்துக்கோ அல்லது அநீதிக்கோ ஆளாகாதிருத்தல்.

\+ சகல இனத்தவர்களினதும் மற்றும் சமயக் குழுக்களினதும் பாதுகாப்பு மற்றும் பரஸ்ப புரிதல், நம்பிக்கை மற்றும் உரிமைகள்.

\+ 2015 - 2019 புதிய அரசமைப்பொன்றைத் தயாரிப்பதற்காகக் கடைப்பிடித்த செயற்பாங்கினை துரிதமாக நிறைவு செய்து, சமத்தவம் மற்றும் ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரே நாட்டுக்குள் அனைத்து மக்களும் ஆட்சியில் தொடர்பு கொள்ளக்கூடியவாறு ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனத்துக்கும் மாவட்டத்துக்கும் மற்றும் மாகாணத்துக்கும் அரசியல் ரீதியானதும் நிர்வாக ரீதியானதுமான அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கின்ற அரசாளுகைக்கான அனைத்து இனத்தவர்களினதும் அரசியல் பங்காண்மையை உறுதி செய்கின்ற புதிய அரசமைப்பொன்றைத் தயாரித்தல்.

\+ தற்போது காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ள மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் தேர்தலை ஒரு வருடத்துக்குள் நடத்தி மக்கள் நிர்வாகத்தில் பங்கு கொள்வதற்கான வாய்ப்பை வழங்குதல்.

\+ சட்டரீதியான அதிகாரங்களைக் கொண்ட பாரபட்சத்துக்கு எதிரான ஆணைக்குழு ஒன்றை ஸ்தாபித்தல்.

\+ வடக்கு, கிழக்கு உள்ளிட்ட ஏனைய பிரதேசங்களில் கடந்த காலத்தில் இடம்பெற்ற அரசியல் படுகொலைகள், காணாமல் போகச் செய்வித்தல்கள் மற்றும் ஆள்கடத்தல்கள் பற்றி புலன் விசாரணை மேற்கொண்டு நீதியை நிலைநாட்டுதல்.

\+ இனவாதம் மற்றும் மதத் தீவிரவாதம் காரணமாக இடம்பெற்றுள்ள வன்முறைச் சம்பவங்களைப் புலன் விசாரணை செய்வதற்கான உண்மை மற்றும் மீளிணக்கத்துக்கான ஆணைக்குழுவின் செயற்பாட்டை விரிவாக்குதல்.

\+மதங்களுக்கிடையிலான மோதல்களைத் தீர்த்து வைப்பதற்கான அனைத்து மதத் தலைவர்களையும் மதம் சார்ந்த கல்விமான்களினதும் உள்ளடக்கத்துடனான சர்வ மதப் பேரவை ஒன்றை ஸ்தாபித்தல்.

\+ அரசியல் கைதிகளை விடுதலை செய்தலும் அவர்கள் சுதந்திரமாக சமூகமயமாதலை உறுதிப்படுத்துதலும்.

\+ பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் உள்ளிட்ட அடக்குமுறை சார்ந்த அனைத்துச் சட்டங்களையும் இல்லாதொழித்து அனைத்த மக்களினதும் சுதந்திரத்தை உறுதி செய்தல்.

\+ வடக்கு, கிழக்கு உள்ளிட்ட நாட்டின் சகல பிரதேசங்களிலும் மக்களது சிவில் உரிமைகளை உறுதிப்படுத்தும் வகையிலான சிவில் நிர்வாகத்தை முறைமைப்படுத்துதல்.

\+ கல்வி மற்றும் தொழில் வாய்ப்புக்கள் அரசியல் அழுத்தங்கள் இன்றி சகல இனத்தவர்களுக்கும் நியாயமான வகையில் கிடைக்கக் கூடியதாக தகைமைகளின் அடிப்படையில் பெற்றுக்கொடுப்பதனை உறுதி செய்தல்.

\+ மானிய உதவிகள் மற்றும் பாதுகாப்பு அவசியமாகும் யுத்த விதவைகள், அநாதைகள் மற்றும் மன அழுத்தங்களுக்கு ஆளானவர்களுக்கான மானிய உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல்.

\+காணிகள் மற்றும் வாழ்விடங்கள் பற்றிய தேசிய ஆணைக் குழு ஒன்றினூடாக நிலவும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணல்.

\+ இனக் கட்டமைப்பை மாற்றியமைக்கும் குறிக்கோளுடன் மேற்கொள்ளப்படும் மக்கள் குடியேற்றங்களை நிறுத்துதல்.

\+ அரசமைப்பின் 16ஆவது திருத்தத்தின் கீழ் ஏற்றுக் கொள்ளப்பட்ட தேசிய மொழிக் கொள்கையை அவசியமான வளங்கள் மற்றும் தொழில்நுட்ப வசதிகளைப் பெற்றுக் கொடுத்து நடைமுறைப்படுத்துதல். அனைத்துப் பிரஜைகளும் தமது மொழியில் சேவைகளைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையிலான தேசிய மொழிக் கொள்கையொன்றை அமுலாக்குதல். தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் கூடுதலாக வாழ்கின்ற வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள பொலிஸ் நிலையங்கள், அரச அலுவலகம் போன்ற சிவில் சேவைகள் நிலவும் இடங்களில் தமிழ் மொழியில் பணிகளை ஆற்றக் கூடியதாக உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் மற்றும் மொழிபெயர்ப்பாளர்களை நியமித்தல்.

\+ 2023.10. 15 ஆம் திகதி கொண்டதாக தேசிய மக்கள் சக்தி வெளியிட்ட ஹட்டன் பிரகடனத்தில் குறிப்பிட்டவாறு மலையகத் தமிழ் மக்களின் அடையாளத்தையும் உரிமைகளையும் ஏற்றுக்கொண்டு அவர்களின் காணி, வீடமைப்பு, கல்வி, சுகாதாரம் போன்ற வசதிகளை முன்னேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

\+ மலையகத் தமிழ் சமுதாயத்தின் சம்பளத்தை வாழ்க்கைச் செலவுக்கு ஏற்று வகையில் அதிகரித்தல். மக்கள் கௌரவமான வருமானத்தைப் பெறுவதற்குள்ள உரிமையை உறுதிப்படுத்துதல்.

\+ வடக்கு, கிழக்கு உள்ளிட்ட ஏனைய பிரதேசங்களின் கடற்றொழில் நடவடிக்கைகளில் வெளிநாட்டு மீனவர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ள சவால்களை இராஜதந்திர ரீதியாகத் தீர்த்து, அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளையும் விற்பனை வசதிகளுக்கான வாய்ப்புக்களையும் உருவாக்குதல்.

---

## மக்கள் ஆணையைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எனத் தெரியவருகின்றது.

அதற்குப் பதிலாக இந்தத் தேர்தலைத் தமிழர் தேசமாகத் தமிழ் மக்கள் ஒன்று திரளுவதை வெளிப்படுத்தும் சந்தர்ப்பமாகப் பயன்படுத்துவதற்குப் பொது கட்டமைப்பு தீர்மானித்திருக்கின்றது எனவும் அறியப்படுகின்றது.

தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பின் கூட்டம் நேற்றுப் பகல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றபோது தமிழ்ப் பொது வேட்பாளரின் சார்பில் முன்வைக்கப்படவிருக்கும் தேர்தல் விஞ்ஞாபனம் குறித்துப் பூர்வாங்க நிலையில் ஆராயப்பட்டது என அறியவந்தது.

அந்த விஞ்ஞாபனத்திலேயே இந்த ஜனாதிபதித் தேர்தலைத் தமிழ் மக்களின் ஆணையைக் கோரும் ஒரு விடயமாக சில தரப்புக்கள் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தன எனவும், தேர்தலைத் தமிழர் தேசமாக ஒன்றுபடுவதற்கான ஓர் அடையாளமாகப் பயன்படுத்தலாம் என்று அந்தத் தரப்புக்கள் வலியுறுத்தின எனவும் தெரிகின்றது.

அந்த நிலைப்பாடு பலரின் அதிருப்திக்கு மத்தியில் ஏற்றுக்கொள்ளப்பட்டது எனவும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேசமயம் தமிழரின் கருத்தறியும் சர்வஜன வாக்கெடுப்பையும் தமிழ்ப் பொது வேட்பாளரின் தேர்தல் விஞ்ஞாப னத்தில் கோர வேண்டும் என்ற சிவாஜிலிங்கத்தின் கோரக்கையும் நேற்று அவர் நேரில் பிரசன்னமாகி வலியுறுத்திய போதிலும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என அறியவந்தது.

---

## யாழில் நாய் கடித்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயிரிழந்தார்.

கடந்த மாதம் வளர்ப்பு நாய் கடித்து இரத்தம் வடிந்த நிலையில் உரிய சிகிச்சை பெறாமல் அவர் தவிர்த்துள்ளார்.

சில வாரங்களுக்குப் பின்னர் தோல் வருத்தம் ஏற்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அவர் சென்றுள்ளார்.

இந்நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்று அவர் உயிரிழந்தார்.

மரண விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

# தமிழ்ப் பொது வேட்பாளருக்கே ரெலோ தொடர்ந்தும் ஆதரவு!

**நாம் ரணிலுக்கு ஆதரவு வழங்கப்போவதாக விஷமிகள் பொய்ப் பிரச்சாரம் திட்டமிட்ட புரளிகளை நம்பவே வேண்டாம் என்று சுரேந்திரன் கூறுகின்றார்**

(எஸ்.நிதர்ஷன்)

எமது கட்சி தமிழ்ப் பொது வேட்பாளருக்கான ஆதரவு நிலைப்பாட்டில் தொடர்ந்தும் உள்ளது என்று தமிழீழ விடுதலை இயக்கத்தின் ஊடகப் பேச்சாளர் குருசாமி சுரேந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழீழவிடுதலை இயக்கத்தின் (ரெலோ) அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

“தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பின் ஊடாக தமிழ்ப் பொது வேட்பாளராக அரியநேத்திரன் போட்டியிடுகின்ற நிலையில் நமது ஆதரவை வழங்கியிருந்தோம்.

இந்நிலையில், தெற்கிலிருந்து ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுகின்ற ரணில் விக்கிரமசிங்க மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகியோரிடம் இருந்து பேச்சுக்கு வருமாறு அழைப்புகள் கிடைத்தன. அவர்கள் இருவரையும் நாங்கள் சந்தித்தோம். அதற்கான காரணங்களையும் தெளிவுபடுத்தியிருந்தோம். அதாவது எமது பொது வேட்பாளரின் கொள்கை தொடர்பில் ரணிலிடமும், சஜித்திடமும் தெளிவாகக் கூறினோம். அவர்களும் அதனை ஏற்றார்கள்.

ஆனால், அவர்கள் தமக்கு ஆதரவு வழங்குமாறு கேட்கவில்லை. அது உங்கள் ஜனநாயக உரிமை, உங்களுடைய கோரிக்கை தொடர்பில் நாம் கரிசனை செலுத்துகின்றோம் என்று அவர்கள் தனித்தனியே தெரிவித்தார்கள்.

நாங்கள் அவர்களின் கருத்து தேர்தலுக்கான கருத்தா? அல்லது உண்மையில் தமிழ் மக்கள் தொடர்பில் கரிசனையாக உள்ளனரா? என்பது தொடர்பில் எமது பொதுக் கட்டமைப்புடன் ஆராய்ந்து பதில் தருவோம் எனக் கூறினோம்.

இந்தச் சந்திப்பின் பின்னர் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ரெலோ ஆதரவு வழங்கப் போவதாகச் சில விஷமிகள் பொய்ப் பிரச்சாரம் செய்தனர்.



அதுமட்டுமல்லாது அண்மையில் இலங்கைக்கான சுவிஸ் தூதர் பொதுக் கட்டமைப்பு சார்ந்தவர்களை யாழ்ப்பாணத்தை சந்தித்தார்.

இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினரான சித்தார்த்தன் பங்குபற்றிய நிலையில் நாங்கள் பங்குபற்றவில்லை என்பதைக் காரணமாக வைத்து சிலர் விஷமப் பிரச்சாரம் செய்தனர்.

சிவில் அமைப்புப் பிரதிநிதிகளைச் சந்திப்பதற்காகவே சுவிஸ் தூதுவர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார். திடீரென்று ஒழுங்குபடுத்தப்பட்ட சந்திப்பு என்பதால் எமது கட்சியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் அதில் பங்குபற்ற முடியவில்லை.

தற்போதும் இரண்டாவது கட்டமாக பிரதான ஜனாதிபதி வேட்பாளர்கள் பேச்சுவார்த்தைக்கு வருமாறு அழைப்பு விடுத்திருக்கின்றனர். அவர்களுடன் மீண்டும் பேசுவதற்குத் தயாராக இருக்கின்றோம்.

ஆகவே, எமது கட்சி தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிப்பது என்ற முடிவு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் பொது வேட்பாளரின் அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் கலந்துரையாடவுள்ளோம்.” – என்றார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒன்று திரள்வோம்’ என்று என்ற வேண்டுகோளை முன் நிறுத்தும் விதத்தில் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தை சுருக்கிக் கொள்ளும் கட்டாயம்.

தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்கு தமிழர்கள் மத்தியில் தனித்துவமான சர்வஜன வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்பட வேண்டும் என்ற வலியுறுத்தலும் தமிழ்ப் பொது வேட்பாளரின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இருக்காது.

சர்வஜன வாக்கெடுப்பு விடயமும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழர் தேசத்தின் கோரிக்கையாக முன்வைக்கப்பட வேண்டும் என்ற சிவாஜிலிங்கத்தின் வற்புறுத்தல் நேற்று மேற்படி பொதுக் கூட்டமைப்பு கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்படாமல் நிராகரிக்கப்பட்டு விட்டது என அறிய வந்தது.

மேற்படி இரண்டு விடயங்களையும் நிராகரிக்கச் செய்யும் வலியுறுத்தலில் ரெலோவும் ஜனநாயகப் போராளிகள் கட்சியும் மிக உறுதியாக நின்றன எனத் தெரிகின்றது.

பொதுக் கட்டமைப்பில் இணைவதற்கு 83 அமைப்புக்களின் பிரதிநிதிகள் தயாராக இருக்கிறார்கள் என்று ஆரம்பத்தில் கயிறு விட்ட பத்தி எழுத்தாளர்களிடம், எங்கே அந்த 83 அமைப்புகளின் பிரதிநிதிகள் என்று கேள்வி எழுப்பினார் கூட்டத்தில் பங்கு பற்றிய ஒரு கட்சியின் பிரமுகர்.

பத்தி எழுத்தாளர்கள் ஏதோ சமாளித்து, சாக்குப் போக்குச் சொல்லி, நேரடியாக பதில் கூறாமல், அசடு வழிந்தனர் என்று தகவல்.

நேற்றைய கூட்டத்தில் பொதுக் கட்டமைப்பின் பிரதிநிதிகள், தென்னிலங்கையின் பிரதான ஜனாதிபதி வேட்பாளர்கள் அழைத்தால் ஒன்றாகப் போய் பேச வேண்டும் என்று மேற்படி ரெலோவும் ஜனநாயகப் போராளிகளும் வலியுறுத்தி நின்றனர்.

என்ன நிபந்தனையுடன் பேசப் போவது என்று ஒரு கட்சித் தலைவர் கேட்க, கொழும்பில் தூதரகத்தினர் அழைத்ததும் சாப்பாட்டுக்கும் சந்திப்புக்கும் நிபந்தனை விதித்தா பேச ஓடுகின் றீர்கள் என்று சீற்றத்துடன் கேட்டுச் சூடு கிளப்பினார் ஓர் எம்.பி.

தென்னிலங்கை வேட்பாளர்கள் பேச அழைத்தால் பொதுக் கட்டமைப்பாக பேசச் செல்வது தொடர்பில் சுரேஷ் பிரேமச்சந்திரனும் ஐங்கரநேசனும் கூறிய எதிர்க் கருத்துக்கள் நிராகரிக்கப்பட்டு, பேச்சு நடவடிக்கையில் ஈடுபடுவது என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

தேர்தல் பிரச்சாரத்திற்கான நிதி விடயம் குறித்தும் விரிவாக பேசப்பட்டதாகத் தெரிகிறது. இதற்கான நிதிக் கையாளுகையை ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வங்கிக் கணக்கின் ஊடாக மேற்கொள்ளலாம் என்ற யோசனை முன்வைக்கப்பட்ட போதிலும், அக்கட்சியைத் தன் ஏற்பாட்டில் வைத்திருக்கும் புளொட் தலைவர் சித்தார்த்தன் அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. சுயேச்சை வேட்பாளரின் கணக்கு வழக்கை ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணியின் வங்கி கணக்கு ஊடாக கையாள்வது வீண் பிரச்சனைகளைக் கொண்டு வரும் என்றார் சித்தார்த்தன்.

அதனை அடுத்து பொதுக் கட்டமைப்பு தெரிவு செய்த பொது வேட்பாளர் அரியநேத்திரனின் பெயரில் ஒரு வங்கிக் கணக்கை ஆரம்பித்து, அதனூடாக தேர்தல் தொடர்பான கொடுக்கல் – வாங்கல்களைக் கையாளலாம் என்று முடிவு செய்யப்பட்டது .

ஏற்கனவே பிரசாரத்துக்கு என 60 லட்சம் ரூபா நிதி கிடைத்திருப்பதாகவும், அதில் 5 லட்சம் ரூபா யாழ்ப்பாணத்தில் ஊடக அலுவலகத்தை வைத்து இயக்கும் வெளிநாட்டு பிரமுகர் தந்தது எனவும் கூறப்பட்டது.

தமிழரசுக் கட்சியின் நடக்கவிருந்த தேசிய மாநாட்டுக்கு உதவிய அதே ஊடக முதல்வர்தான் பொது வேட்பாளரின் தேர்தல் பிரசாரத்திற்காக முதல் கட்டமாக ஐந்து லட்சம் ரூபா வழங்கினார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சட்டப்படி இந்த ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்திற்கு ஒரு வாக்காளருக்கு ஆகக்கூடியது 109 ரூபா பணத்தையே வேட்பாளர் செலவழிக்க முடியும். அதன்படி இலங்கை வாக்காளர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது ஒரு வேட்பாளர் ஆகக்கூடியது ஒரு கோடியே 80 லட்சம் ரூபாதான் பிரசாரத்துக்குச் செலவழிக்க முடியும்.

அதில் மூன்றில் ஒரு பங்கு – 60 லட்சம் ரூபா – பொதுக் கட்டமைப்பு வேட்பாளருக்கு இப்போதே வந்துவிட்டது. எஞ்சியதும் விரைவில் வந்து சேர – இடையில் பிய்ச்சல், பிறாண்டல், சுரண்டல் இல்லாமல் வந்து சேரப் பிரார்த்திப்போம்...!







# பெண்களுக்கு முதலிடம் மாதாந்தம் 20,000 ரூபா!

## சஜித்தின் புதிய செயற்றிட்டம்

"நாட்டை வங்குரோத்து அடைய செய்த தற்போதைய அரசாங்கத்தில் உள்ள தலைவர்களின் விவேகமற்ற, அக்கறையில்லாத கொள்கைகளினால் லட்சக்கணக்கானோர் வறுமைக்கு உள்ளாகி இருக்கின்றார்கள். அவர்கள் வறுமையில் சிக்கி எல்லையற்ற அளவில் அசாதாரண நிலைக்குத் தள்ளப்பட்டு இருக்கின்றனர்."

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்த 16ஆவது மக்கள் வெற்றிக் கூட்டம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் தலைமையில் நேற்று முற்பகல் கந்தளாய், சேருவில நகரில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோது சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

"யாரும் வறுமையில் இருக்கக் கூடாது. வறுமை எனும் அடிமைத்தனத்துக்கு கட்டுப்படாது. பல்வேறு நிகழ்வுகளினாலும் அரசாங்கத்தின் விவேகமற்ற, அக்கறை இல்லாத கொள்கை திட்டங்களினால் மக்கள் வறுமையில் சிக்கி இருக்கின்றார்கள். வறுமையில் இருந்துகொண்டு கையேந்துகின்ற சமூகமொன்றை உருவாக்காது, அபிமானம் உள்ள மக்கள் வாழ்கின்ற, எமது நாட்டில் எவருடைய அடிமை சேவகர்களாக இல்லாமல் தன்னம்பிக்கையுடன், தன்னிறைவோடு எழுந்து நிற்க நம்பிக்கை உள்ள சமூகம் இருப்பதால் குறிப்பிட்ட காலத்துக்குள் வறுமையை இல்லாது செய்வோம்.

இந்த 20,000 ரூபா நிவாரணம் வழங்கப்படுகின்ற போது 24 மாதங்களில் வறுமையை ஒழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். வீட்டில் உள்ள பெண்களுக்கு இந்த சலுகைகளை பெற்றுக்கொடுத்து, வீடுகளிலேயே அனைத்து விடயங்களையும் நேர்த்தியாகவும் வளமாகவும் முன்னெடுப்பதால் அவர்களை மையமாகக் கொண்டே இந்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்படும்.

வறுமை என்பது சுமையல்ல. நாட்டை கட்டி எழுப்புகின்ற பின்புலத்தை உருவாக்குகின்றவர் என்ற அடிப்படையில் இந்த நிவாரணங்களை வழங்குகின்றோம். பொய் இல்லாமல் இந்த செயற்றிட்டத்தை முன்னெடுப்போம்.

பங்களாதேஷில் கிராமிய வங்கி கருத்திட்டத்தின் ஊடாகவும் உலகின் பல நாடுகளிலும் குறுகிய காலத்துக்குள் வறுமைப் பிடியிலிருந்து மீண்டிருக்கிறார்கள். அதற்கான உதாரணங்கள் உண்டு. இதற்காக அரசாங்கத்தின் நிவாரணங்கள் மற்றும் குறித்த நபர்களின் அர்ப்பணிப்பு என்பன தேவை. நாடு வீழ்ச்சி அடைந்திருக்கின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் இவ்வாறான நிவாரணங்களை மிகவும் சிரமத்திற்கு மத்தியிலே வழங்குவதால் அதை மக்கள் பொறுப்புணர்வுடன் செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் ஊடாக தரமான 50 கிலோ நிறையுள்ள உர மூடையுன்றை 5000 ரூபாவிற்கு வழங்குகின்றோம். மக்களால் சகித்துக் கொள்ள முடியுமான தொகைக்கு உர மருந்துகளை வழங்குவதோடு, இருட்டடிப்பு வர்த்தகத்தை நிறுத்தவும் நடவடிக்கை எடுத்து, இவற்றை கமநல சேவைகள் மத்திய நிலையத்தின் ஊடாக வழங்குவோம். விவசாயிகளுக்கு, மீன்பிடியாளர்களுக்கு, சக்கர வண்டி சாரதிகளுக்கு, பாடசாலை போக்குவரத்து வழங்குனர்களுக்கும் சக்தி அரசி ஆலை உரிமையாளர்களுக்கும் நிவாரண அடிப்படையில் எரிபொருளை வழங்கவும் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் கொரோனா அச்சுறுத்தல் நாட்டின் வங்கரோத்து நிலை என அனைத்து விடயங்களினாலும் விவசாயிகள் அனைத்து விதங்களிலும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். தரமற்ற உர விநியோகம், உரத் தட்டுப்பாடு, சேதன உர மோசடி என்பனவற்றினாலும் தமது தங்க ஆபரணங்களையும் சொத்துக்களையும் அடகு வைத்து விவசாயத்தில் ஈடுபட்ட விவசாயிகளுக்கு பாரிய சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. எனவே விவசாயிகளுடைய விவசாய கடனை நாங்கள் இரத்து செய்வோம்." – என்றார்.





நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அநுராவின் சாமர்த்தியம்

தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் திட்டமிட்டுக் காய் நகர்த்தியிருக்கின்றார் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுரகுமார திஸநாயக்க.

தென்னிலங்கை பௌத்த - சிங்களத் தீவிரப் போக்காளர்களுடனும் முரண்படாமல் - தமிழர் தரப்புடனும் முட்டுப்படாமல் - இரண்டுக்கும் நடுவில் தமது உத்தேசத் திட்டத்தை கட்டவிழ்த்திருக்கின்றார் அவர்.

தமிழர்களுக்கு அடிபணிந்து விட்டார், தமிழர்கள் கேட்டவற்றையெல்லாம் விட்டுக் கொடுத்து விட்டார், தமிழீழத்துக்கு இடமளித்து விட்டார், சிங்களத்தைக் காட்டிக் கொடுத்து விட்டார் என்ற சீற்றங்கள் எல்லாம் தென்னிலங்கையில் எழாமலும் -

தமிழர்கள் எதிர்பார்த்தவற்றுக்குக் கிட்டவும் வராத - ஓர் உப்புச்சப்பற்ற - யோசனையை முன் வைத்திருக்கிறார் என்று தமிழர் தரப்பிலிருந்து பெரும் அதிருப்தி கிளம்ப முடியாதவாறும் -

இரண்டுக்கும் நடுவில் ஒரு திட்டத்தை மெல்ல - கனகச்சிதமாக - அவர் முன் வைத்திருக்கிறார்.

இந்தியாவினால் கொழும்பின் மீது பலவந்தமாகத் திணிக்கப்பட்ட திட்டம் என்று தென்னிலங்கை கருதும் 13 ஆவது அரசமைப்பு திருத்தத்தையும் தொடாமல் அவர் தந்திரமாக ஒரு நகர்வை முன்னெடுத்திருக்கின்றார்.

2015 முதல் 2019 வரை, தேசிய இனப் பிரச்சினைக்காக தீர்வையும் உள்ளடக்கிய புதிய அரசமைப்புக்கான ஒரு திட்ட முயற்சி அப்போதைய நல்லாட்சி அரசினால் முன்னெடுக்கப்பட்டது. முக்கால் கிணறு வரை முன்னேறிய அந்த நகர்வு, அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாட்டினால் முன்நகராமல் - பூர்த்தி செய்யப்படாமல் - இடைவழியில் - தடைப்பட்டுப் போயிற்று.

அவ்வளவு தூரம் விட்டுக் கொடுப்புக்களை வழங்கி, இந்த முயற்சியில் தமிழர்கள் ஒத்துழைத்து முன்னேறிய போதிலும், அதை ஒப்பேற்றாமல் இடைவழியில் பொத்தெனக் கைவிட்டமை மூலம் இவ்விவகாரத்தில் வழமைபோல தென்னிலங்கை பௌத்த - சிங்களம் தமிழர்களை ஏமாற்றி விட்டது என்று தமிழர்கள் கருதும் நிலைமையை அந்த முயற்சி ஏற்படுத்தி விட்ட சூழலில், அதனைத் தொடர்ந்து முன்னெடுத்து, குறுகிய காலத்தில் பூர்த்தி செய்து, தீர்வு காணப்போவதாக தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதி அளித்திருக்கின்றார் அநுரகுமார.

இந்தப் புதிய அரசமைப்பு முயற்சியில் பின்வரும் சாதகமான அம்சங்களும் பொதிந்துள்ளன: -

+ 13 ஆவது அரசமைப்பு திருத்தத்திற்கு அப்பால் சமஷ்டிக்கான ஒழுங்குகள் - சாயல்கள் - அதில் இருக்கின்றன என்பது தமிழர் தலைவர் சம்பந்தனின் உறுதியான கருத்து.

+ அந்த அரசமைப்பு நகல் வடிவத்தை ஜே.வி.பி. உட்பட பிரதான தென்னிலங்கை கட்சிகளும் எதிர்க்கவில்லை. மாறாக, அவை எல்லாம் ஆதரித்து நின்றன.

+ நாட்டின் ஆட்சி முறைமை, தேர்தல் சீர்திருத்தம் போன்ற விடயங்கள் தவிர்ந்த ஏனையவற்றில் - பிரதானமாக அதிகார பகிர்வு ஏற்பாடு உட்பட்ட விவகாரங்களில் - அந்த அரசமைப்பு நகலை அனைத்துத் தரப்புக்களுமே ஏற்றிருந்தன என்பது மறுக்க முடியாத உண்மை.

- அத்தகைய அரசமைப்பு உருவாக்க முயற்சியை விட்ட இடத்தில் இருந்து தொடர்ந்து முன்னெடுத்துப் பூர்த்தியாக்குவது என்ற யோசனை திட்டம், முரண்பட்டு, எதிரும் புதிருமாக மோதி நிற்கும் இனங்களுக்கு இடையில் இணக்கத்தை ஏற்படுத்துவதற்கு ஓர் ஆக்கபூர்வமான யோசனைதான்.

ஆனால், அதை முன்னெடுப்பவர்களாக இப்போது வாக்குறுதி தருபவர்களும், தென்னிலங்கை மக்களும் இந்த உறுதிமொழியிலாவது உறுதியாக நிற்பார்களா? நமது இனத்தின் பட்டறிவு சந்தேகத்துடன்தான் இந்த யோசனைத் திட்ட நகர்வையும் பார்க்கின்றது என்பது மறுக்க முடியாத உண்மை.

# சீமானை கைது செய்யக் கோரி மதுரையில் உண்ணாவிரதம் இருந்த வழக்கறிஞர் கைது



நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமானை கைது செய்யக் கோரி, மதுரை காந்தி மியூசியத்தில் தனி ஆளாக உண்ணாவிரதம் இருந்த வழக்கறிஞர் ஒருவரை பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

மதுரை காந்தி மியூசியம் சிறந்த சுற்றுலாத் தலமாகவும், காந்தியவாதிகள் வந்து செல்லும் புனித இடமாகவும் திகழ்கிறது. பாடசாலை மாணவர்கள் காந்தியைப் பற்றி தெரிந்து கொள்வதற்காக அதிகளவு இங்கு வந்து செல்கிறார்கள். வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள், வெளிமாநில சுற்றுலாப் பயணிகள், தமிழகத்தின் பிற மாவட்டத்தை சேர்ந்தவர்கள் ஆயிரக்கணக்கானோர் அங்கு வந்து செல்கிறார்கள். அரசியல் கட்சி நிகழ்ச்சிகளை நடத்த இங்கு அனுமதி கிடையாது.

இந்த நிலையில், நேற்று காந்தி மியூசிய வளாகத்தில் முன்அறிவிப்பு இல்லாமல் காந்தி சிலை முன்பு திடீரென்று மதுரை வழக்கறிஞரும், சமூக ஆர்வலருமான ஆர்.கனகவேல் என்பவர் உண்ணாவிரதம் மேற்கொண்டார்.

அப்போது அவர், நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமானை கைது செய்யக் கோரி கோஷமிட்டார். அவரது திடீர் உண்ணாவிரதப் போராட்டத்தால் காந்தி மியூசிய வளாகத்தில் பரபரப்பு ஏற்பட்டது. அவரை வேடிக்கை பார்க்க, சுற்றுலாப் பயணிகள், பொதுமக்கள் உள்ளிட்டோர் அங்கு திரண்டனர். இதனால் அதிர்ச்சியடைந்த காந்தி மியூசிய நிர்வாகிகள், இதுகுறித்து பொலிஸாருக்கு தகவல் தெரிவித்தனர். இதையடுத்து அங்கு வந்த தல்லாகுளம் பொலிஸார் உண்ணாவிரதம் போராட்டத்தில் ஈடுபட்ட வழக்கறிஞர் ஆர்.கனகவேலை கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

இதுகுறித்து கருத்து தெரிவித்த வழக்கறிஞர் ஆர்.கனகவேல்,

"சீமான், சமீப காலமாக அனைத்து அரசியல் கட்சித்தலைவர்களையும், பொலிஸாரையும், அரசு அதிகாரிகளையும் தரம் தாழ்ந்து விமர்ச்சித்து வருகிறார். சமீபத்தில் முன்னாள் முதல்வர் கருணாநிதியை விமர்சித்துப் பாடிய நாம் தமிழர் கட்சியைச் சேர்ந்த சாட்டை துரைமுருகனை கைது செய்த போது, "அதே பாடலை நான் பாடுகிறேன், தைரியம் இருந்தால் என்னை கைது செய்து பாருங்கள்" என்று பொலிஸாரை ஏளனம் செய்தார்.

ஓர் அரசியல் கட்சித் தலைவர் இப்படி நடந்து கொள்ளலாமா? பொலிஸ் அவர் மீது நடவடிக்கை எடுக்கத் தயங்குவதால் கடந்த 3 நாள்களாக இன்னும் தரம் தாழ்ந்து எல்லோரையும் விமர்சிக்க தொடங்கி உள்ளார். ஆகவே அவரை கைது செய்ய வேண்டும்." – என்றார்.

# தி.மு.க.வினரை ரஜினியை வைத்து அவமதிக்கிறார் முதல்வர் ஸ்டாலின்

## கே.பி.முனுசாமி தெரிவிப்பு

"தி.மு.கவில் உள்ள சீனியர்களை வெளியேற்ற முடியாததால் ரஜினிகாந்தை வைத்து தமிழக முதல்வர் ஸ்டாலின் அவர்களை அசிங்கப்படுத்துகிறார்."

– இவ்வாறு அ.தி.மு.க. துணை பொதுச் செயலாளர் கே.பி.முனுசாமி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று கிருஷ்ணகிரியில் செய்தியாளர்களிடம் அவர் கருத்து தெரிவிக்கையில்,

"நடந்து முடிந்த அமைச்சர் எ.வ.வேலுவின் புத்தக வெளியீட்டு விழாவில் பேசிய ரஜினிகாந்த், முதல்வரை புகழ்ந்து பேசியுள்ளார். தி.மு.க. தலைவர் ஸ்டாலின் தனது தந்தையின் ஆட்சியில் பல்வேறு பொறுப்புகள் வகித்து அதன் பிறகு தற்போது ஆட்சியைப் பிடித்துள்ளார். எம்.ஜி.ஆர், ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு அடிப்படை உறுப்பினராக இருந்து படிப்படியாக உயர்ந்து இன்று பொதுச் செயலாளர் ஆகியுள்ளார் பழனிசாமி. இது ரஜினிகாந்துக்கு தெரியாது, ஆகவே, முதல்வரை புகழவேண்டும் என்பதற்காக ரஜினிகாந்த் தான்தோன்றித்தனமாக பேசக் கூடாது.

தமிழக முதல்வர் ஸ்டாலின் தி.மு.கவில் உள்ள சீனியர்களை வெளியேற்ற முடியாத நிலையில், எ.வ.வேலு எழுதிய புத்தக வெளியீட்டு விழாவில் ரஜினிகாந்தை அழைத்துப் பேசவிட்டு சீனியர்களை அவமானப்படுத்தி இருப்பதாக எனக்கு சந்தேகம் எழுந்துள்ளது. தி.மு.கவுக்கு நீண்ட காலம் உழைத்த சீனியர் துரைமுருகன் உட்பட மூத்த தலைவர்கள் வெளியேற வேண்டும் என ரஜினிகாந்தை வைத்து அவமானப்படுத்தி உள்ளார் ஸ்டாலின். இதுபோன்று 2 ஆம் கட்ட தலைவர்களை அ.தி.மு.க. ஒருபோதும் அவமானப்படுத்தியது கிடையாது.

பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை தலைமைப் பொறுப்பேற்று 3 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளது. இந்த 3 ஆண்டுகளில் அவர் மக்களைச் சந்திக்கவில்லை, மாறாக, ஊடகங்கள், பத்திரிகைகளை சந்தித்து அரசியல் செய்து வருகிறார். இந்த 3 ஆண்டுகளில் அவரது ஒவ்வொரு கருத்



துகளும் முன்னுக்குப் பின் முரணாகவே இருந்துள்ளன. ஜெயலலிதாவை பற்றி கருத்து சொல்லும்போது, அண்ணாமலை 'என்னுடைய மனைவியும் ஆளுமை மிக்கவர்' என்று சொல்கிறார். பின்னர் கடுமையாக விமர்சனம் செய்கிறார், இப்படி முன்னுக்குப் பின் முரணாக பேசக் கூடியவருக்கு ஒரு தலைவராக வர எந்தவிதமான தகுதியும் இல்லை.

கடந்த மக்களவைத் தேர்தலில் ஊடகங்கள், பத்திரிகைகளுக்கு பல்வேறு செய்தியை அண்ணாமலை சொன்னார். இந்தத் தேர்தலில் 25 தொகுதிகளில் பா.ஜ.க. கூட்டணி வெற்றி பெறும். அ.தி.மு.க. காணாமல் போகும் என்றார். இரண்டாவது பெரிய கட்சி பா.ஜ.க. எனச் சொன்னார் அண்ணாமலை. ஆனால், ஓர் இடத்திலாவது பா.ஜ.க. வெல்ல முடிந்ததா? கடந்த முறை வென்ற கன்னியாகுமரி தொகுதியில் கூட தோற்றதால் அண்ணாமலைக்கு பயம் வந்து வந்துவிட்டது. தலைமை பொறுப்பில் இருக்கும் வரை ஏதாவது ஒரு கருத்தை சொல்கிறார். நிச்சயமாக பா.ஜ.க. தலைமை இதையெல்லாம் உணர்ந்து அவரை தலைமைப் பொறுப்பில் இருந்து வெளியேற்றுவார்கள். அதற்காகத்தான் அவர் லண்டனுக்குப் படிக்கப் போவதாகச் சொல்லி வருகிறார்."– என்றார்.





# மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் நடிகை நமீதாவுக்கு அனுமதி மறுப்பு

மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் சாமி தரிசனத்துக்குச் சென்ற நடிகை நமீதாவிடம் இந்து என்பதற்கான சான்றிதழ் கேட்டதாகக் கூறப்பட்ட நிலையில், கோயில் நிர்வாகம் விளக்கம் அளித்துள்ளது.

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் பல்வேறு மாநிலங்களிலிருந்து பக்தர்கள் வருகின்றனர்.

இதனால் பாதுகாப்பிற்காக இந்து மதத்தினர் மட்டும் கோயிலுக்குள் அனுமதிக்கப்பட்டு வழிபட அனுமதிக்கப்படுகின்றனர்.

இந்த நிலையில், நேற்றுக் காலை தனது கணவருடன் நடிகை நமீதா மீனாட்சி அம்மன் கோயிலுக்குத் தரிசனம் செய்வதற்காகச் சென்றுள்ளார்.

அப்போது அங்கிருந்த கோயில் அதிகாரி ஒருவர் நமீதாவிடம், “நீங்கள் இந்து மதத்தைச் சேர்ந்தவரா, அதற்கான சான்றிதழ் எதுவும் உள்ளதா?” என்று கேட்டுள்ளார்.

அதற்கு அவர், நானும் எனது கணவரும் பிறப்பிலேயே இந்து. பல்வேறு கோயில்களில் சாமி தரிசனம் செய்துள்ளோம்” என்றும் கூறியுள்ளார்.

இதன் பின்னர் அந்த அதிகாரி, ”குங்குமம் வைத்துக் கொண்டு சாமி தரிசனம் செய்யச் செல்லுங்கள்” என்று கூறியதாகக் கூறப்படுகிறது.

பின்பு அவரும் குங்குமம் வைத்துக்கொண்டு சாமி தரிசனம் செய்துள்ளார்.

இந்நிலையில், நடிகை நமீதா கோயிலில் நடந்தது குறித்து காணொலியாக வெளியிட்டு இந்து அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறியுள்ளார். தற்போது அந்த காணொளி வைரலாகி வருகிறது.

இது தொடர்பாகக் கோயில் நிர்வாகம் தரப்பில், ”பொதுவாக முகக்கவசம் அணிந்து வருவோரிடம் விவரம் கேட்பது நடைமுறை. அதே போல முகக்கவசம் அணிந்து வந்த நமீதாவிடம் விவரம் கேட்கப்பட்டுள்ளது. அதுதவிர வேறு ஒன்றுமில்லை.

அவர் நடிகை என்பது முன்கூட்டியே எங்களுக்குத் தெரியாது.” என்று விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.



# உக்ரைனின் சக்திமூலத் தளங்கள் மீது ரஷ்ய படைகள் மீண்டும் கடும் தாக்குதல்



உக்ரைனின் சக்திமூலத் தளங்களை இலக்கு வைத்து ரஷ்யா கடுமையான தாக்குதல்களை நடத்திவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான தாக்குதல்களால் 5 பேர் மரணித்திருப்பதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. கீவ் உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் கடுமையான தாக்குதல்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஒரே இரவில் ரஷ்யாவிலிருந்து நூற்றுக் கணக்கான ஏவுகணைகள் மற்றும் நூற்றுக் கணக்கான ட்ரோன் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக, உக்ரைனின் ஜனாதிபதி வொலொடிமிர் செலன்ஸ்கீ தெரிவித்துள்ளார்.

முக்கியமான கட்டுமானங்களை இலக்குவைத்து உயர்ந்த பட்ச தாக்குதல்களை நடத்தியதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

இந்த தாக்குதல்கள் காரணமாக உக்ரைன் முழுவதும் மின்தட்டுப்பாடு மற்றும் நீர்விநியோகத் தடை என்பன ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை உக்ரைனுடனான அமைதிப் பேச்சுவார்த்தை பெறுமதி இழந்துவிட்டதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

ரஷ்ய அரசாங்கத்தின் பேச்சாளர் டெமிட்ரி பெஸ்கேவ் இதனை அறிவித்துள்ளார்

# ஐஸ்லாந்தில் இடிந்து விழுந்த பனி குகை; சுற்றுலாப் பயணிகள் இருவர் மாயம்

சுற்றுலா குழு ஒன்று ஐஸ்லாந்தின் பனிப்பாறை பகுதிக்குச் சென்றிருந்த போது பனி குகை ஒன்று இடிந்து விழுந்ததில் ஒருவர் உயிரிழந்ததுடன், இருவர் காணாமல் போயுள்ளனர்.

25 சுற்றுலாப் பயணிகளைக் கொண்ட குழு, ஐஸ்லாந்தின் தெற்கு பகுதியில் உள்ள டீசநலைையஅநசமரசதழமரடட பனிப்பாறை பகுதிக்கு சுற்றுலா சென்ற போது குகையின் பனி சுவர் ஒன்று இடிந்து விழுந்துள்ளது.

தற்போதுவரை விபத்தில் சிக்கிய நபர்கள் எந்த நாட்டை சேர்ந்தவர்கள் என உறுதிபடுத்தப்படவில்லை.

பனிக்கட்டிகளுக்கு அடியில் சிக்கி இருப்பதாக நம்பப்படும் இரு சுற்றுலாப் பயணிகளை மீட்கும் பணியில் 200 பேர் வரை ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

விபத்தில் சிக்கியவர்களில் 2 சுற்றுலாப்பயணிகள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

படுகாயமடைந்த மற்றொரு நபர் உலங்குவானுர்தியின் உதவியுடன் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி தெரிவிக்கின்றன.







# இந்தோனேஷியாவில் வெள்ளம்; 11 பேர் பலி

இந்தோனேஷியாவில் தொடரும் கன மழையினால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்கி இதுவரை 11 பேர் உயிரிழந்தனர்.

இந்தோனேஷியாவின் வடக்கு மலுகு மாகாணம் டெர்னேட் தீவில் பெய்து வரும் கனமழையால் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக பல்வேறு பகுதிகள் கடும் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளன.

குறிப்பாக, ருவா எனும் கிராமத்தில் உள்ள பல்வேறு குடியிருப்புகள் வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டுள்ளன என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பிரதான வீதிகள் மற்றும் கிராமங்களுக்கான தரைவழி தொடர்புகளும் துண்டிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை அங்கு பல வீடுகள், கட்டடங்கள் சேற்றில் புதைந்துள்ள நிலையில், மீட்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன என தெரிவிக்கப்படுகின்றது.





# ஒலுவில், நிந்தவூர்ப் பகுதிகளில் காட்டு யானைகளின் நடமாட்டம்

(இஸட்.ஏ.றஹ்மான்)

அம்பாறை மாவட்டத்தில் தற்போது சிறு போக வேளாண்மை அறுவடை நிறைவடைந்து வரும் நிலையில் மக்கள் வாழும் பகுதிகள், மக்கள் பிரயாணம் செய்யும் பாதைகளில் காட்டு யானைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

அந்த வகையில் ஒலுவில் , நிந்தவூர் பகுதிகளில் யானைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. இதனால் அப்பகுதியில் வாழும் மக்கள், விவசாயிகள் மற்றும் பிரயாணிகள் மிகவும் பீதியுடன் காணப்படுகின்றனர்.

எனவே மாலை வேளையில் இப்பகுதிகளில் பயணம் செய்பவர்கள் அவதானத்துடன் செல்லுமாறு கேட்டுக் கொள்ளப்பசுகின்றனர். இவ் விடயத்தில் வனவிலங்குத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் கரிசனை காட்டி நடவடிக்கை எடுக்குமாறும் மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# வளர்ப்பு நாய் கடித்ததால் யாழில் மூதாட்டி மரணம்!

யாழ்ப்பாணத்தில் வளர்ப்பு நாய் கடித்ததால் பாதிக்கப்பட்ட மூதாட்டி ஒருவர் சிகிச்சை பலனின்றிநேற்றுய் உயிரிழந்தார்.

வண்ணார்பண்ணையைச் மகேந்திரன் சாந்தி என்ற 62 வயதானவரே இவ்வாறு உயிரிழந்தார்.

கடந்த மாதம் வளர்ப்பு நாய் கடித்து இரத்தம் வடிந்த நிலையில் உரிய சிகிச்சை பெறாமல் அவர் தவிர்த்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

சில வாரங்களுக்கு பின்னர் மூதாட்டிக்கு தோல் வருத்தம் ஏற்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு சென்றுள்ளார்.

இந்நிலையில் சிகிச்சை பலனின்றி மூதாட்டி இன்று உயிரிழந்தார்.

மரண விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.



# 32 நெற்களஞ்சியசாலைகளை நாடு முழுதும் திறக்கத் திட்டம்

நாடு முழுவதும் 32 நெற்களஞ்சிய சாலைகளை திறப்பதற்கு திட்டமிடப் பட்டுள்ளது.

சிறுபோகத்தில் நெல்லுக்கான கொள்வனவுவிலை அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முதலாம் கட்டத்தின் கீழ் நெல் கொள்வனவிற்காக நிதி அமைச்சினால் 500 மில்லியன் ரூபா வழங்கப்படவுள்ளது.

அதற்கமைய 5000 மெட்ரிக் தொன் நெல்லை கொள்வனவு செய்ய எதிர்பார்த்துள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் புத்திக இத்தமல்கொட தெரிவித்துள்ளார்.



# வடக்கு, கிழக்கு பிரதேசத்தை விருத்தி செய்வதற்காக சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டை நடத்துவோம்

## ஏறாவூர்க் கூட்டத்தில் சஜித் பிரேமதாஸ அறிவிப்பு

யுத்தத்தின் பின்னர் வடகிழக்கு பிரதேசம் இன்னும் சரியான அபிவிருத்தியை நோக்கி செல்லவில்லை. வடக்கு, கிழக்கு பிரதேசத்தை விருத்தியாக்கும் நோக்கில் சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டை ஐக்கிய மக்கள் சக்தி நடத்தி, வடகிழக்கு பகுதியை மேம்படுத்துவதோடு, முழு நாட்டையும் அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்போம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

2024 ஜனாதிபதித் தேர்தலுக்கான ஐக்கிய மக்கள் சக்தியின் 18 ஆவது மக்கள் வெற்றிப் பேரணி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் நேற்று மாலை மட்டக்களப்பு, ஏறாவூர் அஹமட் பரீட் மைதானத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த அரசியல் தலைவர்கள், அப்பகுதியை சேர்ந்த ஏராளமான மக்கள் எனப் பெரும் திரளானோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

மந்த போசனை நிலைமை அதிகரித்து காணப்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. தேசிய போசாக்கு கொள்கையை நாட்டிற்குள் நடைமுறைப்படுத்தி, அப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவோம். மந்த போசனையே இல்லாமல் செய்வதற்கு நடவடிக்கை எடுப்போம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

சுற்றுலாத்துறையை விரிவுபடுத்தி அதனூடாக ஏற்படுகின்ற அபிவிருத்தியின் பிரதிபலனை மக்களுக்கு கிடைக்கச் செய்வோம். அதற்கு மேலதிகமாக கடன் மாபியா காரணமாக மக்களும் கடன் சுமைக்குள் சிக்கி இருக்கின்றார்கள். சூறையாடும் ஒன்லைன் கடன் மாபியாவில் இருந்து மக்களை மீட்டெடுக்க நடவடிக்கை எடுப்போம் எனவும் அவர் தெரிவித்தார்.

இளைஞர் அபிவிருத்தி மத்திய நிலையங்களை அமைத்து இளைய தலைமுறையினரை அறிவாற்றலுடன் உருவாக்கி, அதனூடாக தொழில் வாய்ப்பின்மையை நிவர்த்தி செய்வோம்.

அதிகாரத்திற்கு வந்த உடனே புல்மோட்டையில் உள்ள கனிம மணல் வளத்தை நிலையான அபிவிருத்திக்கு பயன்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்போம். புல்மோட்டையில் கனிம வளங்களை மக்கள் மயப்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்களுக்கு அதிகபட்சமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்போம் என்றார் அவர்.

நாட்டைப் பாதாளத்துக்குள் விழச் செய்து, வங்கரோத்து அடையச் செய்த தலைவர்கள் தற்போதைய ஜனாதிபதியின் கீழ் இருக்கின்றார்கள். மக்கள் வறுமையில் இருக்கின்ற போது ஆட்சியாளர்கள் சுகபோகமாக வாழ்கின்றார்கள். நான் மக்களுக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு ஆட்சிக்கு வந்தவுடன் 24 மாதங்களுக்குள் வறுமையைப் போக்க நடவடிக்கை எடுப்பேன். இந்த வேலை திட்டங்கள் மகளிர் மையப்படுத்தியதாக அமையும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் சுட்டிக்காட்டினார்.







# அநுர குமாரவை நீதிமன்றத்தில் சந்திப்பதற்குத் தயாராம் தொலைக்காட்சி விவாதத்துக்கும் அழைக்கிறார் ஹக்கீம்

## அக்குறணை உரையில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் தெரிவிப்பு

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திஸநாயக்க நஷ்ட ஈடு கோரி எனக்கு கடிதம் அனுப்புவது பிரச்சினையே இல்லை. நீதிமன்றத்தில் நானாகவே வாதாட தயாராக இருப்பதோடு , அவரை தொலைக்காட்சி விவாதம் ஒன்றுக்கு வருமாறும் அழைப்பு விடுக்கின்றேன்.

– இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங் கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் அக்குறணையில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்ற சஜித் பிரேமதாஸவின் ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

அநுர குமார திஸநாயக்க எனக்கெதிராக வழக்குத் தொடுத்தால் நீதிமன்றத்தில் நானே தோன்றி எனக்காக வாதாடுவேன். அத்துடன் எந்தவொரு தொலைக்காட்சி ஊடகத்திலும் என்னோடு விவாதம் ஒன்றுக்கு வருமாறு அவருக்கு நான் அழைப்பு விடுக்கின்றேன். இப்பொழுதே அல்ல, தேர்தல் காலத்தில் அவருக்கு வேலைப்பளு அதிகம் என்பதால் தேர்தலில் அவர் தோல்வி அடைந்த பின்னர் என்னுடன் விவாதத்திற்கு வரலாம். அவர் குறிப்பிடுகின்ற விடயம் பற்றி சாதாரண பொது மக்கள் எவ்வாறு புரிந்து வைத்திருக்கிறார்கள் என்பது பற்றியும் அதன் போது விவாதிக்கலாம்.

அக்குறணையிலிருந்து பேசும் பொழுது இந்த மண்ணின் மைந்தன் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஏ.சி.எஸ்.ஹமீத்தின் ஆளுமையைப் பற்றிக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. சர்வதேச

மட்டத்தில் நன்கறியப்பட்டிருந்த அவர் நாட்டின் தேசிய பற்றாளர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர் மட்டுமல்லர், எங்களது ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் தகப்பனார் ரணசிங்க பிரேமதாஸவோடும் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தார் .

திகணையில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்செயலை ஆரம்பித்து, நாட்டுப்புற அப்பாவிப் பெரும்பான்மை மக்களை உசுப்பேற்றியதோடு அதைத் தொடர்ந்து அங்கு மட்டும் அல்லாமல், அக்குறணை பிரதேசமும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது. நிறைய சொத்துக்களை இழந்தோம். நிறைய பாதிப்புகள் ஏற்பட்டன. அப்பொழுது நாங்கள் அக்குறணை எட்டாம் (மைல்)கட்டைக்கு வந்து வன்செயல்கள் பரவாமல் தடுப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டோம். இப்பொழுது பிரச்சினைகளை தோற்றுவிப்போர் அன்று அவ்விடத்தில் இருக்கவில்லை.

முதலில் நான் கண்டி மாவட்டத்தில் பொதுத் தேர்தலில் போட்டியிட்டபோது, இந்த அக்குறணை, புளுகொஹதன்ன சாஹிரா தேசிய பாடசாலையில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச்சாவடியை அடித்து நொறுக்கி, மக்களை வாக்களிக்க விடாமல் தடுத்த அதே கும்பல் தான் இன்று ரணில் விக்கிரமசிங்காவின் மடியில் குந்திக் கொண்டிருக்கிறார்கள்.

தீவிரவாதம் நாட்டின் எந்த மூலையில் இருந்து தலை தூக்கினாலும் நாங்கள் அதனை எதிர்த்து நிற்போம் .

எங்களது ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் அமோக வெற்றிக்காக நாங்கள் கண்டி மாவட்டத்தில் மட்டுமல்ல, கிழக்கு மாகாணத்திலும், வடக்கிலும் நாட்டின் எல்லா பாகங்களிலும் மும்முரமான பிரசாரப் பணிகளில் ஈடுபட்டு, அவரை இந்த நாட்டின் ஜனாதிபதி ஆக்குவதில் முன்னிற்போம். – என்றார்.








# எல்பிட்டிய பிரதேச சபைக்கு வேட்புமனுக் கோரப்படுகிறது

## தேர்தல் ஆணைக்குழு அறிக்கை

எல்பிட்டிய பிரதேச சபைக்கான உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்வது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

மேற்படி தேர்தலுக்கான கட்டுப்பணத்தை நேற்று முதல் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 11 ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை செலுத்த முடியும் என ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் எதிர்வரும் 31ஆம் திகதி, செப்டம்பர் 1, 7, மற்றும் 8 ஆகிய சனி, ஞாயிறு தினங்களில் கட்டுப்பணத்தை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட மாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

செப்டம்பர் 9 முதல் 12 ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை காலி மாவட்ட செயலகத்தில் வேட்புமனுக்களை தாக்கல் செய்ய முடியும் என தேர்தல்கள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இதற்கு முன்னர் மற்றைய உள்ளூராட்சி மன்றங்களுக்கு 2018 இல் தேர்தல் நடந்த போது எல்பிட்டிய பிரதேச சபைக்குத் தேர்தல் நடக்கவில்லை. நீதிமன்ற வழக்குக் காரணமாக அது தாமதித்து 2019 ஒக்டோபர் 15 ஆம் திகதியே நடந்தது. அதனால் கடந்த வருடம் நாட்டில் ஏனைய 340 உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் முடிந்து புதிய தேர்தலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டபோது, முன்னைய தேர்தலில் தெரிவான எல்பிட்டிய பிரதேச சபை மட்டும் பதவிக் காலம் முடியாமல் இருந்தது. இப்போது அதுவும் பதவிக்காலம் முடிந்த நிலையில் வேட்புமனுக் கோரப்பட்டுள்ளது.




# நாட்டை வந்தடைந்தது சீனஒ போர் கப்பல்கள்

சீனாவின் 3 போர் கப்பல்கள் நேற்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளன.

இருநாட்டு கடற்படைகளுக்கு இடை யிலான ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நோக்கில் பல்வேறு செயற்பாடுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என இலங்கைக் கடற்படை குறிப்பிட்டுள்ளது.

இந்த 3 கப்பல்களும் நாளை மறுதினம் 29 ஆம் திகதி நாட்டிலிருந்து புறப்படவுள்ளன.

# தேர்தல் சுவரொட்டிகளை ஒட்டிய இருவருக்கு 1,500 ரூபா அபராதம்

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்கவின் சுவரொட்டிகளை ஒட்டிய குற்றத்துக்காக, இருவருக்கு கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தினால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தல் விதிமுறைகளை மீறி, சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்த வேளையில் கறுவாத்தோட்டம் பொலிஸாரால் அவர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

சந்தேகநபர்கள் கொழும்பு நீதவான் திலின கமகே முன்னிலையில் பிரசன்னப்படுத்தப்பட்டபோது, இருவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டனர். இந்த நிலையில், நீதவானினால் சந்தேக நபர்கள் இருவருக்கும் தலா 1,500 ரூபா அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.



# அரச ஓய்வூதியம் பெறாதவர்களுக்கும் கொடுப்பனவு வழங்குவதற்குத் திட்டம்

அரச ஓய்வூதியம் பெறாதவர்களுக்கு, பங்களிப்பு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை சமூக பாதுகாப்பு சபை ஆரம்பித்துள்ளது.

அதன் பிரகாரம், ஒருவர் தமது சபையில் அங்கத்தவரானதன் பின்னர் அவருக்கான ஓய்வூதியம் தயாரிக்கப்படும் என அந்த சபையின் பொது முகாமையாளர் கே.ஏ.எஸ்.பிரசன்ன களுஆரச்சி தெரிவித்துள்ளார்.

அதன்படி, எதிர்வரும் காலங்களில் அரச ஓய்வூதியம் பெறாதவர்களுக்கு பங்களிப்பு ஓய்வூதியம் வழங்கும் நோக்கில் இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக தகவல்களை 011-2886 088 அல்லது 076-095-4002 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும் என சமூக பாதுகாப்பு சபையின் பொது முகாமையாளர் கே.ஏ.எஸ்.பிரசன்ன களுஆராய்ச்சி அறிவித்துள்ளார்.



# ஆயிரத்தைக் கடந்தன தேர்தல் முறைப்பாடுகள்

ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய முறைப்பாடுகளின் எண்ணிக்கை ஆயிதத்தைக் கடந்துள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித் துள்ளது.

அதன்படி, கடந்த ஜூலை 31 ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரை 1,052 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என அந்த ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாத்திரம் 127 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

அவற்றில் வன்முறை தொடர்பில் 3 முறைப்பாடுகளும், தேர்தல் சட்டம் மீறல் தொடர்பில் 105 முறைப்பாடுகளும், தேர்தலுடன் தொடர்புடைய வேறு வகையான 19 முறைப்பாடுகளும் உள்ளடங்குகின்றன எனத் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.



# நுவரெலியாவில் நடந்த சரத் பொன்சேகாவின் பிரசாரக் கூட்டம் மக்களின்றி வெறிச்சோடியது

நுவரெலியாவில் நேற்று நடைபெற்ற முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் பிரசாரக் கூட்டம் நுவரெலியா பிரதான நகரில் மணிக் கூட்டுக் கோபுரம் அமைந்துள்ள வாகனத்தரிப்பிடத்தில் மேடை அமைத்து நடைபெற்றது. இதுவும் அவருக்குப் பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

அமைக்கப்பட்ட மேடையில் பொன்சேகா உட்பட சுமார் 10 பேர் இருந்தனர். மேலும் மேடையின் முன் போடப்பட்டிருந்த இருக்கைகளில் எதிர்பார்த்த அளவில் பொது மக்கள் வருகைத்தந்து அமரவில்லை என்பது பெரும் ஏமாற்றத்தை அவருக்கு ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன், பொன்சேகா இராணுவத் தளபதியாக இருந்த காலத்தில் தாக்குதலுக்கு உள்ளான காரும் லொறியில் ஏற்றி மேடைக்கு அருகில் நிறுத்தப்பட்டிருந்தது. அதன் காட்சிகள் அடங்கிய படங்களும் அங்கு தொங்கவிடப்பட்டிருந்தன.

எனினும் அந்தக் கூட்டத்தின் போது ஏராளமான பொலிஸார் வரவழைக்கப்பட்டு தீவிர பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.









# அத்தியாவசியத் தேவைகளுக்காக மாத்திரம் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்கக் கோரிக்கை

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திடம் தற்போது குறைந்த எண்ணிக்கையிலான வெற்று கடவுச்சீட்டுகள் இருப்பதால் கடவுச்சீட்டுகளை வழங்குவதை மட்டுப்படுத்த வேண்டியுள்ளது. அதனால் அத்தியாவசிய தேவைகளுக்காக மாத்திரம் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்குமாறு பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டு விநியோகிக்கப்பட்ட வெளிநாட்டு கடவுச்சீட்டுக்களில் 23 சதவீதமானவை மாத்திரமே பயன்படுத்தப்பட்டுள்ளன எனப் பொது பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஒக்டோபர் மாத இறுதியில் கையிருப்பு பெற்றுக்கொள்ளப்படும் எனவும் அந்த அறிவிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவசர காரணங்களுக்காக மாத்திரம் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்குமாறு பொதுமக்களிடம் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுவதாக அமைச்சின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தேர்தல் பிரசாரங்களுக்கு அரச ஹெலிகளை பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டது

தேர்தல் பிரசாரங்களுக்கு பயணம் செய்வதற்கு அரசுக்குச் சொந்தமான ஹெலிக்கொப்டர்களை பயன்படுத்த ஜனாதிபதி வேட்பாளர்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அரசுக்கு சொந்தமான ஹெலிக் கொப்டர்களை பயன்படுத்துவதாயின் அதற்குரிய கட்டணத்தை நிச்சயம் செலுத்த வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழு ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

தேர்தல் செயற்பாடுகளுக்காக அரச சொத்து பயன்படுத்தல் தொடர்பில் கிடைக்கப் பெற்றுள்ள 1,052 முறைப்பாடுகள் குறித்து உடன் விசாரணைகளை முன்னெடுக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ள நிலையில், தேர்தல் பிரச்சாரங்கள் மற்றும் அரசியல் கூட்டங்களில் கலந்துக் கொள்வதற்காக நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு செல்வதற்கு விமானப் படைக்குச் சொந்தமான ஹெலிக்கொப்டர்கள் மற்றும் சிறிய ரக விமானங்கள் ஜனாதிபதி வேட்பாளர்கள் பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் பிரசாரங்கள் அல்லாத பிறிதொரு கடமைகளுக்காக ஹெலிக் கொப்டர்களை பயன்படுத்துபவர்களுக்கு அரச ஹெலிக்கொப்டர்களை வழங்குவதில் பாதிப்பில்லை எனவும் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

தேர்தல் செயற்பாடுகளுக்காக இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ், ரயில்களை பயன்படுத்துவதாக இருந்தால் அதற்கான கட்டணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ள வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.எல்.ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் செயற்பாடுகளுக்காக அரச சொத்துக்களை பயன்படுத்துவது குறித்துக் கிடைக்கப் பெற்றுள்ள முறைப்பாடுகள் தொடர்பில் உடனடியாக நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு சகல மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.





# தேர்தல் காலத்தில் தவளைகள் போல் பாய்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை

## நாமல் ராஜபக்ஷ கூறுகின்றார்

"தேர்தல் காலத்தில் வரப்பிரசாதம் மற்றும் தனிப்பட்ட இலாபம் ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு தவளை போல் பாய்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். கட்சி தாவல்களில் ஈடுபடுபவர்களுக்கு உயர்நீதிமன்றம் அண்மைக் காலமாக வழங்கிய தீர்ப்புக்களை வரவேற்கிறேன்."

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

'அன்பான தாய், தந்தையரே! மூத்த மகன் ஊருக்கு வருகிறேன்' என்ற தொனிப்பொருளின் கீழ் அம்பாந்தோட்டை பகுதியில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

"அரசியல்வாதிகள் எம்மை விட்டுச் சென்றாலும் மக்கள் எம்முடன் உள்ளார்கள் என்பதை எமது முதலாவது பிரசாரக் கூட்டத்தில் உறுதிப்படுத்தியுள்ளோம். அடிமட்ட மக்களின் ஆதரவுடன் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவோம்.



தேர்தல் காலத்தில் வரப்பிரசாதங்கள், தனிப்பட்ட இலாபம் ஆகியவற்றுக்காகத் தவளைகளைப் போல் பாய்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். குறுகிய தேவைகளுக்காகக் கட்சி தாவல் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக உயர் நீதிமன்றம் அண்மைக் காலமாக வழங்கியுள்ள தீர்ப்புக்களை வரவேற்கிறேன்.

நபர்களை அடிப்படையாகக் கொண்டு நாங்கள் அரசியலில் ஈடுபடவில்லை. கொள்கைகளை முன்னிலைப் படுத்திச் செயற்படுகிறோம். நாட்டை பிளவுபடுத்தும் செயற்பாடுகளுக்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என்பதில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளோம்.

தேர்தல் வெற்றிக்காகப் பொய்யான வாக்குறுதிகளை எத்தரப்பினருக்கும் வழங்கப் போவதில்லை. அபிவிருத்தித் திட்டங்களில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்பதில் எவ்வித மாற்றுக்கருத்தும் கிடையாது."– என்றார்.









# இன்றைய ராசி பலன்கள் - 27.08.2024




உங்களுக்கு பயன் தரும் வகை யிலான சரியான முடிவுகளை இன்று உங்களால் எடுக்க இயலும். இன்று நன்மைகள் நடை பெறும் நாள்.

நீங்கள் உங்கள் பணிகளை ஆர்வத் துடனும் உறுதியுடனும் ஆற்றுவீர்கள். சுய முயற்சி காரணமாக நன்மை அடைவீர்கள்.

நீங்கள் இன்று உங்கள் துணையுடன் விருந்துகளில் கலந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும். மேலும் சமூக வட்டாரத்தில் கலந்து பழக முடியும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். நிதிகளில் முதலீடு செய்வது இன்று பலனளிக்கும்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் இருக்கும் ஆற்றல் காணரமாக உங்கள் ஆரோக்கியம்




இன்று உங்களுக்கு சிறப்பான நாள். உங்கள் அக்கம் பக்கத்தவரின் ஆதரவு கிடைக்கும். இன்று அனைத்தும் சிறப் பாக நடக்கும். இன்று நல்ல பலன்கள் கிடைக்கும்.

உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். அவர்கள் உங்களை பாராட்டுவார்கள். உங்கள் கடின உழைப்பு மற்றும் திறமை வெளிச்சத்திற்கு வரும்.

உங்கள் துணையுடன் விருந்து விசேஷங்களில் கலந்து கொள்ள வேண்டிய நேரம். இதில் நீங்கள் பங்கு கொண்டு மகிழ்வீர்கள். உங்கள் துணையிடம் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வீர்கள்.

வெளி நாட்டிலிருந்து பணம் கிடைக்க வாய்ப்புள்ளது. உங்களுக்கு தேவைப் படும் பொழுது அந்தப் பணம் கிடைக்கும்.




உங்கள் மனதில் இருக்கும் குழப பம் காரணமாக இன்று சிறிது அமை தியின்மை காணப்படும். இது உங்கள் முடிவெடுக்கும் திறமையை பாதிக்கும்.

உங்கள் பணிகளை ஆற்றும் போது கவனம் தேவை. இல்லாவிடில் தவறு கள் நேர வாய்புள்ளது. இது சிக்கலுக்கு வழிவகுக்கும்.

உங்கள் துணையுடன் தவறான புரிந்தணர்வு காணப்படும். இதனால் வாக்கு வாதங்கள் ஏற்படும். இத்தகைய சூழ்நிலையை தவிர்ப்பது நல்லது.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. திட்டமிடலின்மை காரணமாக நீங்கள்சில பிரச்சினைகளை சந்திக்க நேரும். இன்று சுறுசுறுப்பாக இருக்க வேண்டியது அவசியம்.இன்று உங்களால் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிக்க இயலாது.




இன்று சற்று அனுகூலமற்ற நாளாக இருக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க இயலாத நிலை இருக்கும். இன்று பொறுமை அவசியம். எந்த விஷயத்தை யும் லேசாக எடுத்துக் கொள்ளுங்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணியிடச் சூழலில் சுமூகமான நிலை இருக் காது. சக பணியாளர்களுடனான தொடர்பில் சில பிரச்சி னைகள் காணப்படும்.

இன்று முழுவதும் உங்கள் துணையுடன் அமைதியாக கட்டுப்பாட்டுடன் பழகுங்கள். தேவையற்ற பேச்சுக்களை தவிர்க்கும் வகையில் நாவடக்கம் மேற்கொள்ளுங்கள்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். செலவுகள் அதிகமாக இருக்கும். உங்கள் தேவைகளுக்காக கடன் வாங்குவீர்கள்.




இன்று காணப்படும் சிறிய பிரச்சி னைகளை கையாள கடின முயற்சி தேவை .

பணி வளர்ச்சியைப் பொருத்தவரை இன்று உகந்த நாள் அல்ல. இன்று பணிச்சுமை காணப்படும். பணியை திட்டமிட்டு ஆற்ற வேண்டும்.

இன்று மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் உங்கள் துணையுடன் உரையாடும் போது கவனம் தேவை. எந்த விஷயத்தையும் இலேசாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

நிதி சம்பந்தமான முக்கிய முடிவுகள் இன்று எடுப்பதை தவிர்க்கவும். பெரிய முதலீடுகள் முயற்சி இன்று ஏற்புடையதல்ல.இன்று பல்வலி அல்லது செரிமானம் போன்ற பிரச்சினைகள் ஏற்படலாம். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.




இன்று சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். கடினமான சூழ்நிலைகளை சமாளிக்க மிகுந்த பொறுமை அவசியம். நம்பிக்கையுடன் செயல்பட்டால் பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமையும்.

இன்று அதிக பணிச்சுமைகள் காணப்படும். நீங்கள் திறமையுடன் பணியாற்ற உங்கள் பணிகளை திட்டமிட வேண்டும்.

உங்களின் அகந்தைப் போக்கு உங்கள் துணை யுடனான பிணைப்பை பாதிக்கும். உங்கள் கடுமையான வார்த்தைகள் அவரை பாதிக்கும். உங்கள் பிரிய மானவருடன் மகிழ்ச்சியாக இருக்க இதனை தவிர்த்தல் வேண்டும்.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். முன்னேற்றம் பெறுவதற்கான வலிமையையும் உற்சாகமும் உங்களிடம் காணப்படும். இன்று அனைத்து விதத்திலும் செழிப் பாக இருக்கும்.

புதிய வாய்ப்புகளால் உற்சாகமும் திருப்தியும் காணப்படும். உங்கள் பணிகளை மகிழ்வுடன் செய்வீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இதனால் உங்கள் இருவருக்கும் இடையே நெருக்கம் அதிகரிக்கும்.இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். ஸ்திரமான நிதிநிலை காணப்படும்.

மகிழ்ச்சியின் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சீரும் சிறப்புமாக இருக்கும்.




இன்றைய நாள் முழுஅளவிலான அனுகூலத்தை அளிக்காது. பலன்கள் தாமதமாக கிடைக்கும். உங்கள அர்ப் பணிப்பும் நீங்கள் கையாளும் முறை யும் உங்களுக்கு உதவிகரமாக இருக்கும்.

பணிகளை திட்டமிட்டு அதன்படி செயல்படுத்தினால் கடைசி நிமிட அல்லல்களை தவிர்க்கலாம். அதனால் பதட்டமின்றி காணப்படலாம்.

நீங்கள் உங்கள் கணவன் ஃ மனைவிக்கு உற்ற துணையாக இருங்கள். உங்கள் இனிமையான வார்த்தைகளால் உற்சாகப்படுத்துங்கள். இதனால் உறவு வலுப்படும்.சாதாரணமாக செய்யும் செலவை விட இன்று அதிகமாக செலவு செய்வீர்கள்.என்றாலும் பணத்தை பயனுள்ள நோக்கத்திற்காக செலவு செய்வீர்கள்.இன்று எண்ணெய் பதார்த்தங்களை உண்ண வேண்டாம். அது உங்கள் தோலை பாதிக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 27.08.2024




இன்றைய நாள் ஆக்கமுடைய நாளாக அமையும். சிறிய தொலைவிலான பயணமும் மற்றும் சில மாற்றங்களின் காரணமாக உங்கள் தைரியத்தையும் உறுதியையும் நீங்கள் இழக்க நேரலாம்.

குறித்த நேரத்திற்குள் கொடுக்கப்பட்ட பணியை முடிப்பது சற்று கடினமாக இருக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் மற்றும் உங்கள் துணையின் இடையே தொடர்பாடலில் இடைவெளி காணப்படும். இது உறவின் சீரமைப்பை கெடுக்கும். விஷயங்களை எளிதாக எடுத்துக் கொள்வது நல்லது.

நிதிநிலைமை சீராகவோ நல்ல முறையிலோ காணப்படாது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்வது இயலாது.




இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.உங்கள் நடவடிக்கைகளில் கவனம் தேவை.இன்று உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும்.

உங்கள் சகபணியாளர்களுடன் சச்சரவுகள் ஏற்படலாம்.பொறுமையுடன் இருந்து செயலாற்றவும்.

தொடர்பாடலில் உள்ள குறைபாடு காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். புரிந்துணர்வு மூலம் இதனை தவிர்க்கலாம்.

இன்று பணப் பற்றாக்குறை காணப்படும். இன்று காணப்படும் செலவினங்களை சமாளிக்க கடன் வாங்க நேரலாம்.

உங்களுக்கு கால்வலி ஏற்பட வாய்ப்புள்ளது. உடற்பயிற்சி மேற்கொள்வது நல்லது.




உங்கள் மனதில் சில இலக்குகளை கொண்டிருப்பீர்கள். அவைகளை செயலாற்றுங்கள். அதனை எளிய வழியில் அடையலாம். பயணத்தின் மூலம் ஆதாயம் கிடைக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். உங்கள் திறமைக்கு மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.பணிகளை உற்சாகமாக மேற்கொள்வீர்கள்.

நீங்கள் இருவரும் ஒருவரையொருவர் புரிந்து கொண்டதன் காரணமாக உங்கள் துணையுடன் நல்ல தொடர்பு கொண்டிருப்பீர்கள்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். கூடுதல் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் கிடைக்கும்.இன்று உங்களிடம் அதிக ஆற்றலும் சுறுசுறுப்பும் காணப்படும்.




நீங்கள் உங்கள் ஆற்றல் மூலம் வெற்றி காண்பீர்கள். உங்கள் மனது தெளிவாக இருக்கும். எனவே உங்கள் செயல்களை சிறப்பாக ஆற்றுவீர்கள். உங்களின் உறுதி காரணமாகஇன்றைய நாளை கழிப்பது உங்களுக்கு எளிதாக இருக்கும்.

புதிய வேலை வாய்ப்புகளால் நம்பிக்கையுடனும் புத்துணர்ச்சியுடனும் இருப்பீர்கள். உங்கள் பணிகளை விரைந்து மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பு வயப்பட்ட நிலையில் இருப்பீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

இன்று உங்களிடம் போதிய பணம் காணப்படும். பணத்தைப் பொறுத்த வரை திருப்தியான நிலை இருக்கும்.

உங்களிடம் காணப்படும் தைரியம் காரணமாக இன்று நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




